**செய்தி வெளியீடு எண்: 620** **நாள்: 16.10.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 97 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1141 சேமிப்புக் கிடங்குகளை திறந்து வைத்தார்கள்.

விவசாயிகள் உச்சக்கட்ட அறுவடைக்காலங்களில் தங்களது அவசரப் பணத் தேவைக்காக வேளாண் விளை பொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்த்து, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கிடங்குகளில் தங்களது விளைபொருட்களைப் பாதுகாப்பாக வைத்து அதன் விலையில் 60 முதல் 80 சதவிகிதம் வரையிலான தொகையினை தானிய ஈட்டுக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகளின் வேளாண் விளைபொருட்கள் ஏல மையத்தில் ஏலம் விடப்பட்டு விற்பனை செய்யப்படும்பொழுது ஏலம் எடுக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களுக்கான மொத்த தொகையும் வியாபாரிகளால் செலுத்தப்படும் வரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க கிடங்கில் ஒரு மாதம் வரையில் சேமித்து வைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கிடங்குகளின் சேமிக்கும் திறன் 8 லட்சம் மெட்ரிக் டன் ஆக உள்ளது. இதனை மேலும் அதிகரித்து, வேளாண் பெருமக்களின் பயன்பாட்டிற்குப் போதுமான சேமிப்பு வசதி ஏற்படுத்தும் நோக்கத்துடன் 2011–2012ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1116 கிடங்குகள்; வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 16 கிடங்குகள்; 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 7 கிடங்குகள்; 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள், என மொத்தம் 1141 கிடங்குகள் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 97 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், கூட்டுறவு சங்கங்களில் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 9,30,600 மெட்ரிக் டன் ஆக அதிகரிக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **25.8.2012** அன்று சட்டப்பேரவையில், விவசாயிகளின் நலன் காக்க தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் மூலம் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கேற்ப, இந்தியாவிலயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அதிக அளவிலும், விரைந்தும் கட்டி முடிக்கப்பட்ட **1141** சேமிப்புக் கிடங்குகளை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **15.10.2012** அன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 16.10.2012